**Date.13.02.2025.**

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS. 27/2018

பி.வா.சா.**1**

**பெயர்-திரு. பாலமுருகன்.**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 02/12/2002 ந் தேதியில் எனது சகோதரிகளின் திருமணத்திற்காகவும், வேறு ஒரு நஞ்சை நிலம் வாங்குவதற்காகவும் என்று உள்ளது என்றால் சரிதான். என் பெயரிலும், 2 ம் பிரதிவாதி பெயரிலும் வா.சா.ஆ.6 ஆவண படி 07/11/2002 ந் தேதியில் ஒரு கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். 24/07/2002 ந் தேதியில் வா.சா.ஆ.7 ஆவண படி அதே போல ஒரு கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். 26/07/2002 ந் தேதியில் ஒரு சம்மத பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டோம் என்றால் சரிதான். அது இல்லாமல் 27/04/2005, 13/07/2006, 27/07/2006 ஆகிய மூன்று தேதிகளில் என் பெயரிலும் , 2 ம் பிரதிவாதி, 2 ம் வாதி பெயரிலும் சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் பி.வா சா.ஆ. 8 முதல் 10 ஆக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த 5 கிரையங்களுக்கும் எனக்கு ஏது பணம் என்றால் வா.சா.ஆ.6 , 7 ஆவணங்களில் கண்ட சொத்துக்களை குத்தகைக்கு பயிர் செய்து வந்த பணத்தை வைத்து வாங்கினோம். பி.வா சா.ஆ. 8 முதல் 10 வரையில்

உள்ள ஆவணங்களில் கண்டுள்ள சொத்தையும் குத்தகைக்கு பயிர் செய்து வந்த வருமானத்தை வைத்து தான் வாங்கினோம். கோபிக்கு சொத்து வாங்க எங்கிருந்து பணம் வந்தது என்றால் அவர் எப்படி பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் தற்போது வாங்கியுள்ள 5 கிரைய ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களும் பி அட்டவணை சொத்துக்களில் சேர்க்கப்பட்டுள்ளது. எங்கள் பெயரில் தற்போது போட்டுள்ள இந்த ஆவணங்களை தவிர வேறு சொத்துக்கள் எங்கள் பெயரில் உள்ளதா என்றால் அக்ரிமெண்ட் போட்ட சொத்துக்கள் உள்ளது. நான் சொல்லக்கூடிய கிரைய உடன்படிக்கை பத்திரம் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 4 ஆவணம் தான். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து அக்ரிமெண்ட் போட்டோம். ஆனால் 2ம் வாதி கோபி மட்டும் தனியாக அவர் பெயரில் எங்களுக்கு தெரியாமல் சொத்தை வாங்கிக்கொண்டார். எனக்கு பி.வா.சா.ஆ. 4 அக்ரிமெண்டை எழுதிக்கொடுத்ததே என் தகப்பனார் தான் என்றால் சரிதான். சொத்திற்கு உடையவர்களின் பொது அதிகார முகவர் என்ற முறையில் தான் என் தந்தை அந்த சொத்தை எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 4 அக்ரிமெண்ட் சொத்தை கோபி அவர் பெயரில் தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிக்கொண்ட ஆவணம் தான் பி.வா.சா.ஆ. 5 என்றால் சரிதான். அந்த ஆவணத்தையும் சொத்தின் பொது அதிகார முகவர் என்ற முறையில் என் அப்பா எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. என் தகப்பனார் பெயருக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணத்தை போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். அந்த பொது அதிகார ஆவணம் நகல் தான் பி.வா.சா. ஆ. 3 என்றால் சரிதான். என் அப்பா, நான் , என் சகோதரர்கள் சேர்ந்து சொத்தை ஐய்யனார் என்பவருக்கு கிரையம்

கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் நகல் தான் என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 என்றால் சரிதான். பி.வாசா.ஆ. 2 ஆவணத்திலும் பாப்பாத்தியம்மாள் 02/07/1970 ந் தேதியில் உயில் எழுதிக்கொடுத்ததாகவும், அதன் படி சொத்து வந்ததாகவும், சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாப்பாத்தியம்மாள் சொத்துக்களை அவர் பிள்ளைகளுக்கு சேர்ந்து அவர்கள் அடைந்து அனுபவித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். பாப்பாத்தியம்மாளுக்கு எழுதி வைத்த உயில் குறித்து எனக்கு தெரியாது. அந்த அசல் உயில் யார் வசம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த உயிலின் நகலை நீதிமன்றத்தில் ஒரு ஆவணமாக போட்டுள்ளதை நான் வழக்கறிஞர் சொல்லி தெரிந்துக்கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் பாப்பாத்தியம்மாள் எழுதி வைத்த உயில் சாசனத்தின் நகல் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. பாப்பாத்தியம்மாளிடமிருந்து என் தகப்பனாருக்கு 4 .1/2 ஏக்கர் நிலம் வந்தது. 4. 1/2 ஏக்கர் நிலமும் என் குடும்பத்தின் வசம் உள்ளதா என்றால் இல்லை. என் தகப்பனார் சொத்தை விற்று விட்டார். 2 ஏக்கர் நிலத்தை என் தகப்பனார் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி விற்பனை செய்துவிட்டார். மீத 2. 1/2 ஏக்கர் நிலத்தை யார் அனுபவிக்கிறார்கள் என்றால் கமலகண்ணன் என்பவருக்கு என் அப்பா 50 சென்ட் நிலத்தை அடமானம் போட்டுள்ளார். அதை அவர் அனுபவிக்கிறார். மீதமுள்ள சொத்தில் 70 சென்ட் நிலத்தில் வீடும், ஆர்.ஓ. வாட்டர் பிளாண்டும் உள்ளது. அந்த வீடு 4 பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பதிவு செய்யப்படவில்லை. அதில் நாங்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். எனது மூத்த அண்ணன் ஸ்ரீதர் அந்த வீட்டிற்கு எப்போது வந்தார்

என்றால் சுமார் 2010 ம் ஆண்டு வந்தார். நான் ஒரு பகுதியிலும், ஐய்யப்பன் ஒரு பகுதியிலும் , கோபி ஒரு பகுதியிலும், எனது தாய், தந்தையர் ஒரு பகுதியிலும் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். தற்போது கோபி அந்த வீட்டை விட்டு விட்டு வெளியூர் சென்று விட்டார் என்றால் சரிதான். என் தாய் , தந்தையரும் கோபி உடன் தான் உள்ளார்கள் என்றால் என் அப்பா மட்டும் தான் அவருடன் உள்ளார். என் தாயார் ,என் சகோதரியான 4 ம் வாதி கற்பகம் உடன் இருக்கிறார். இந்த வழக்கில் உள்ள சொத்துக்கள் முழுவதையும் நான் பொது குடும்ப சொத்துக்கள் என்று சொல்கிறேனா என்றால் நான் வாங்கிய சொத்துக்கள் எனது தனிப்பட்ட சொத்துக்கள் ஆகும். மற்ற சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் ஆகும். பொது குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக எங்களுக்குள் பாகம் எதுவும் நடைபெறவில்லை. பொது குடும்ப சொத்துக்கள் சம்மந்தமாக வாதிகள், மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் சமமாக பாகம் பிரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. நானும், என் சகோதரரும் எப்போதாவது என் தகப்பனாரிடம் சென்று பாகம் பிரித்துக்கொடுங்கள் என்று கேட்டோமா என்றால் கேட்டோம். எப்போது கேட்டோம் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கேட்டோம். அவர் பாகம் பிரித்து தருவதாக சொன்னார். என் தகப்பனார் இந்த வழக்கில் சாட்சி சொல்லியுள்ளார். அப்போதுஅவரிடம் எங்கள் தரப்பில் பாகம் பிரித்து தருவது குறித்து கேட்கவில்லை. நான், என் குடும்பத்தார் , சேர்ந்து விற்பனை செய்த பத்திரங்களில் சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது- எந்த பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் உள்ளது. எனக்கு எந்த ஆவணம் என்று ஞாபகம் இல்லை. பாப்பாத்தியம்மாள் சொத்தை விற்கும்போது

பாப்பாத்தியம்மாள் சொத்து என சொல்லி விற்றுள்ளோம் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. என் அப்பா கையெழுத்து போடச்சொன்னார். நான் போட்டேன். எனக்கும், ஐய்யப்பனுக்கும், 2ம் வாதிக்கும் சேர்ந்து எனது தகப்பனார் 08/07/2005 அன்று வா.சா.ஆ. 9 படி ஒரு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நானும், ஐய்யப்பனும் ஏற்றுக்கொண்டோம். எந்த சொத்திற்கு தானம் கொடுத்தார் என்றால் வீடும், வாட்டர் பிளாண்டும் சேர்த்து எங்களுக்கு தானம் கொடுத்தார். வாட்டர் பிளாண்ட் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் உள்ளது. அந்த வாட்டர் பிளாண்டை கோபி 2009, 2010ல் கட்டினார் என்றால் நாங்களும் சேர்ந்து தான் கட்டினோம். வாட்டர் பிளாண்ட் கட்டுவதற்கு ரூபாய் 50 லட்சம் செலவாகியுள்ளது என்றால் அதற்கும் கொஞ்சம் குறைவாக தான் செலவாகியுள்ளது. அதுபோன்று நானும், ஐய்யப்பனும் செலவு செய்ததற்கு கணக்கு உள்ளது. நானும், ஐய்யப்பனும் சேர்ந்து வாட்டர் பிளாண்ட் கட்டினோம் என்று, எனது எதிர் வழக்குரையிலோ , முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் எனது ஆவணத்தில் சொல்லியுள்ளேன். 3 பேர் சேர்ந்து வாட்டர் பிளாண்ட் அமைப்பதாக எழுத்துபூர்வமாக ஒரு ஒப்பந்தம் உள்ளது. அந்த வாட்டர் பிளாண்டின் அனுமதி (லைசன்ஸ்) 2ம் வாதி பெயரில் தான் உள்ளது. இன்று வரையில் அந்த வாட்டர் பிளாண்ட் செயல்படவில்லை என்றால் சரிதான். என்ன காரணம் என்றால் பாக பிரிவினை நடக்கவில்லை என்பதால் அது செயல்படவில்லை. இந்த விவரத்தையாவது நான் எனது பதில் வழக்குரையிலோ அல்லது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வா.சா.ஆ. 9 ஆவணத்தை என் தகப்பனார் ரத்து செய்துவிட்டாரா

என்று எனக்கு தெரியாது. என் அப்பா எழுதி வைத்த ரத்து ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான் என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அவர் ரத்து செய்த விவரம் தற்போது தான் எனக்கு தெரியும். இந்த தான பத்திரத்தை ரத்து செய்துவிட்டு கோபி பெயரில் வா.சா.ஆ 11 ன் படி 26/07/2013 ந் தேதியில் ஒரு தான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது.**